
# விவேகானந்த கல்லூரி

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) ‘A’ கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

04543-258234, 258334
நிகரி : 04543-258358

சுவாமி நியமானந்த
செயலர்



முனைவர் சி.இராஜா
முதல்வர்

# குருகுலச் சுடர்

கல்வியாண்டு 2017-18

சுடர் : 6

டிசம்பர் 2017


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த டிசம்பர் 2017ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

## குருகுலம் சம்பந்தமானது

* 2017-2018ஆம் கல்வியாண்டின் முதல் பருவத்தேர்வு விடுமுறைக்குப் பின் 01.12.2017 அன்று கல்லூரி திறக்கப்பட்டது.
* 01.12.2017 அன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை ஒலி – ஒளி அரங்கில் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கல்லூரிச் செயலர், முதல்வர், துணை முதல்வர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் இக்கல்வியாண்டின் இரண்டாம் பருவத்திற்கான கல்லூரி செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.
* 01.12.2017 அன்று மாலை கல்லூரி பிரார்த்தனைக் கூடத்தில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. இதில் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் R.மோகன் சிறப்பு பேச்சாளராகக் கலந்துகொண்டு “வழிகாட்டும் வள்ளுவம்” என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.
* 02.12.2017 அன்று கல்லூரியின் Awards Committee Meeting நடைபெற்றது. இதில் இக்கல்வியாண்டின் முதல் பருவத் தேர்வு முடிவுகள் வெளியிடுவது குறித்து விவாதிக்கப்பட்டது. அன்று பிற்பகல் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மாணவர்களுக்கு மதிப்பெண் விவரங்கள் வழங்கப்பட்டன.
* 04.12.2017, 11.12.2017, 18.12.2017 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.
* 02.12.2017, 09.12.2017, 16.12.2017, 23.12.2017, 30.12.2017 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.
* 04.12.2017 மற்றும் 05.12.2017 ஆகிய நாட்களில் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும், 07.12.2017 மற்றும் 08.12.2017 ஆகிய நாட்களில் இரண்டாமாண்டு மாணவர்களுக்கும், 11.12.2017 மற்றும் 12.12.2017 ஆகிய நாட்களில் முதலாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் கல்லூரி சமையல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்வேறு அணிகளாகக் கலந்துகொண்ட மாணவர்கள் வெண்பொங்கல், சாம்பார், சட்னி ஆகிய உணவு வகைகளை மிகுந்த ஆர்வத்துடன் சமைத்தனர்.
* 06.12.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் மாதாந்திர தேவை அறிதல் கூட்டம் நடைபெற்றது. இதில் மாணவப் பிரதிநிகள் கலந்துகொண்டு தங்கள் தேவைகளைத் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் கல்லூரிச் செயலர், முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாத மைய இயக்குநர், உணவுக்கூட மேலாளர், பேராசிரியர்கள், விடுதி ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் கண்காணிப்பாளர்கள் கலந்துகொண்டு மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர்.
* 15.12.2017 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் முதல்வர் முனைவர் S.இராஜா பல்கலைக்கழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.
* 21.12.2017 அன்று முதலாண்டு மாணவர்களுக்கும், 22.12.2017 அன்று இரண்டாமாண்டு மாணவர்களுக்கும், 23.12.2017 அன்று மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் பெற்றோர் கூட்டம் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டங்களில் மாணவர்களுடைய பெற்றோர் கலந்துகொண்டதுடன் மாணவர்களின் துறைகளுக்குச் சென்று துறைப் பேராசிரியர்களுடன் மாணவர்களின் கல்விநிலை குறித்து ஆலோசித்தனர்.
* 23.10.2017 அன்று காலை 10.00 மணிமுதல் 12.00 மணி வரை கல்லூரி அக தர உத்தரவாத மையத்தினால் கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடத்தப்பட்ட ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் காந்திகிராமம், காந்திகிராம பல்கலைக்கழக வேதியியல்துறையின் முன்னாள் பேராசிரியர் முனைவர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு “Outcome Based Education” என்ற தலைப்பில் கற்றல் கற்பித்தலில் மேற்கொள்ள வேண்டிய மாற்றம் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர் மற்றும் அனைத்து பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்த் துறை

* 20.12.2017 மற்றும் 21.12.2017 ஆகிய நாட்களில் கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியின் தமிழ்த்துறையும் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனமும் இணைந்து நடத்திய “தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் கலையியலும், கலைஞர்களும்” என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கில் முனைவர் வ.க.இராமகிருஷ்ணன் கலந்துகொண்டார்.
* 28.12.2017 அன்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நூல் அரங்கேற்றம் மற்றும் ‘குதிரையாளி’ நூல் வெளியீட்டு விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வ.க.இராமகிருஷ்ணன் கலந்துகொண்டார்.

## சமஸ்கிருதத் துறை

* 20.12.2017 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பாடத்திட்ட தர மேம்பாடு குறித்த இளங்கலை மற்றும் முதுகலை பாடத்திட்ட குழு உறுப்பினர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் S.ஸ்ரீதர் சுவாமிநாதன் கலந்துகொண்டார்.

## ஆங்கிலத் துறை

* 06.11.2017 முதல் 25.11.2017 வரை ஹரியானா மாநிலம், குருக்ஷேத்ரா பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக மானியக் குழு, மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற கல்லூரி ஆங்கிலத்துறை பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 2017, நவம்பர் 28, 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் கல்லூரியின் அனைத்து இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்குமான ஆங்கில மொழித்திறன் மேம்பாட்டு முகாம் ஆங்கிலத்துறை சார்பாக நடைபெற்றது. இதில் ஆங்கிலத்துறைப் பேராசிரியர்களுடன் மதுரை, மதுரைக் கல்லூரி உதவிப்பேராசிரியர்கள் முனைவர் R.ராஜா, முனைவர் D.புவனேஸ்வரி, முனைவர் S.சுதா, மதுரை, தியாகராசர் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் C.S.செந்தில், திண்டுக்கல், PSNA பொறியியல் கல்லூரி உதவிப்பேராசிரியர் திரு. N.சந்திரசேகர், மதுரை, SVN கல்லூரி உதவிப்பேராசிரியர் திரு.V.வசந்தகுமார் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி உதவிப்பேராசிரியர் திரு.E.K.ஈஸ்வரலால் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.
* 09.12.2017 அன்று ஆங்கிலத்துறை சார்பாக விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டாமாண்டு கணிதம், இயற்பியல், தாவரவியல், விலங்கியல், பொருளியல் மற்றும் வரலாற்றுத் துறை மாணவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் மதுரை, தியாகராசர் கல்லூரி ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் M.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஷேக்ஸ்பியரின் “The Merchant of Venice” என்ற நாடகத்தின் முதலாம் காட்சி குறித்து சிறப்புரையாற்றினார்.
* 07.12.2017 மற்றும் 08.12.2017 ஆகிய இரண்டு நாட்கள் சிவகாசி, மெப்கோ ஸ்லெங்க் பொறியியல் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழக ஆங்கிலத்துறையுடன் இணைந்து நடத்திய “ESL Teaching Support and Teaching Enhancement” என்ற தலைப்பிலான இரண்டு நாட்கள் பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் P.குமரேசன் கலந்துகொண்டார்.
* 15.12.2017 அன்று ஆங்கிலத்துறையில் நடைபெற்ற “Understanding Literary Theory” என்ற தலைப்பிலான விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் மதுரை, பாத்திமா மகளிர் கல்லூரியின் ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் S.J.கலா கலந்துகொண்டு “Post Colonalism: A Kalaidoscopic View” என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து இளங்கலை ஆங்கில இலக்கிய மாணவர்கள் கலந்துகொண்டனர்.
* 24.12.2017 அன்று ஆங்கிலத்துறையில் அனைத்து இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கு நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் “The Secret of Work” என்ற புத்தகம் குறித்த குழுவிவாத நிகழ்ச்சியில் மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரி உதவிப்பேராசிரியர் திருமதி மஞ்சுளா முரளிதரன், மதுரை, பாத்திமா கல்லூரி முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவி S.ஆனந்த வைஷ்ணவி, நமது கல்லூரி ஆங்கிலத்துறை

உதவிப் பேராசிரியர்கள் திரு. P.குமரேசன், முனைவர் S.பாரதிராஜா மற்றும் முனைவர் P.சரவணக்குமார் ஆகியோர் குழு உறுப்பினர்களாகக் கலந்துகொண்டனர்.

## பொருளியல் துறை

* 16.12.2017 முதல் 18.12.2017 வரை திருவனந்தபுரம் குலாத்தி நிதி மற்றும் வரிவிதிப்பு நிறுவனத்தில் நடைபெற்ற இந்திய தொழிலாளர் பொருளியல் நிறுவனத்தின் 59ஆவது ஆண்டு கருத்தரங்கத்தில் உதவிப்பேராசிரியர் திரு.A.சதீஷ்பாபு கலந்துகொண்டார்.
* 26.12.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற முஜமுயுளு ஆநுநுவு மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவற்றை இரண்டாமாண்டு மாணவர்கள் மேற்கொண்டனர். கட்டுரை வாசித்தல், வினாடிவினா, Who Am I?, செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியற்றை மூன்றாமாண்டு மாணவர்கள் நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் வேதியியல்துறைத் தலைவர் உதவிப்பேராசிரியர் B.சேர்வாரமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.
* 27.12.2017 முதல் 30.12.2017 வரை ஆந்திர மாநிலம், குண்டூர், ஆச்சார்யா நாகார்ஜூனர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்திய பொருளியல் கழகத்தின் 100ஆவது ஆண்டு கருத்தரங்கத்தில் உதவிப்பேராசிரியர் திரு. A.சதீஷ்பாபு கலந்துகொண்டு "Performance of Food Grains Production in India – Decadewise Trend Analysis" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

## வரலாற்றுத் துறை

* 16.12.2017 அன்று மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் அமைந்துள்ள சமணர் மலை மற்றும் கொங்கர் புளியகுளம் சமணர் படுகை ஆகிய வரலாற்றுத் தலங்களுக்குப் பேராசிரியர்கள் M.P.குமரேசன் மற்றும் V.முருகன் தலைமையில் முதலாமாண்டு மாணவர்கள் 27 பேர் பார்வையிடச் சென்றனர்.
* 20.12.2017 அன்று மதுரை, பாத்திமா மகளிர் கல்லூரியில் "Women Rights: Past and Present" என்ற தலைப்பில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு V.முருகன் மற்றும் முதலாமாண்டு மாணவர்கள் 10பேர் கலந்துகொண்டனர்.
* 20.12.2017 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் வரலாற்றுத்துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் 11 மாணவர்கள் உதவிப்பேராசிரியர் M.P.குமரேசன் தலைமையில் சென்று கலந்துகொண்டனர்.
* 21.12.2017 அன்று மதுரை, EMG யாதவர் மகளிர் கல்லூரியின் வரலாற்றுத் துறையில் நடைபெற்ற பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இணைப்பேராசிரியர் முனைவர் T.காளியப்பன் துறை வல்லுனராகக் கலந்துகொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த ஆலோசனைகள் வழங்கினார்.

## வணிகவியல் துறை

* 07.12.2017 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் UGC, மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற கல்லூரிப் பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியில் இணைப்பேராசிரியர் முனைவர் மு.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்.
* 10.12.2017 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் வணிகவியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "சரக்கு மற்றும் சேவை வரி" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்.
* 20.12.2017 அன்று முற்பகல் வணிகவியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் S.கிருஷ்ணமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Tally" கணக்குப்பதிவியல் மென்பொருள் பயன்பாடு குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார்.
* 20.12.2017 அன்று பிற்பகல் வணிகவியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம, பரவை, GHCL நிறுவனத்தின் மேலாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Corporate Skills" என்ற தலைப்பில் உரையாற்றினார்.
* 26.12.2017 முதல் 31.12.2017 வரை சிங்கப்பூர், உமறுப்புலவர் தமிழ் மொழி மையத்தில் மதுரை, அமெரிக்கன் கல்லூரியால் நடத்தப்பெற்ற "Emerging Trends in Disciplinary Research" என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.
* 28.12.2017 அன்று மதுரை, EMG யாதவர் மகளிர் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் இணைப்பேராசிரியர் முனைவர் S.பசுபதி துறை வல்லுனராகக் கலந்துகொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த ஆலோசனைகள் வழங்கினார்.
* 02.09.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் மென் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் Weekly News Bulletin, Paper Presentation, Who Am I?, Views of the News, Business Quiz ஆகிய நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பெற்றன. இந்நிகழ்ச்சியில் வணிகவியல் கணினி கணினிப்பயன்பாட்டுத் துறை உதவிப்பேராசிரியர் B.மாரிமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பாகப் பங்குகொண்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

## கணிதவியல் துறை

* 30.11.2017 முதல் 03.12.2017 வரை மதுரை, யாதவர் கல்லூரியின் கணிதவியல் துறையில் நடைபெற்ற (MTTS Camp) நான்குநாள் கணிதவியல் சிறப்புப் பயிற்சி முகாமில் மூன்றாமாண்டு மாணவர்கள் A.சண்முகராஜ் மற்றும் K.ரவிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.
* 12.12.2017 அன்று விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை, இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் திரு. A.செல்வகுமார் மற்றும் சென்னை, கணித அறிவியல் நிறுவனத்தின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் திரு. C.G.கார்த்திக்பாபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு "பட்ட மேற்படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகளுக்குத் தயாராகுதல்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்.
* 19.12.2017 மற்றும் 20.12.2017 ஆகிய இரு தினங்கள் கல்லூரியில் ஒலி-ஒளி அரங்கில் "Vedic Mathematics" என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் R.வன்னியராஜன், முன்னாள் துணைமுதல்வர் மற்றும் துறைத்தலைவர் R.ஜெயபாலன், உத்தரபிரதேசம், ராத், BNPG கல்லூரிப் பேராசிரியர் முனைவர் கைலாஷ் விஷ்வகர்மா, சென்னை, UCCK மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் திரு.C.மயில்வாகனன் மற்றும் தேனி, சேவா பாரதி தென்தமிழகப் பொறுப்பாளர் திரு.K.வினோபா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு வேத கணிதப் பயன்பாடு குறித்து மாணவர்களிடையே உரையாற்றினர். இந்நிகழ்ச்சியின் நிறைவு விழாவில் முன்னாள் துறைத்தலைவர் G.முத்துச்சாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

## இயற்பியல் துறை

* 07.12.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் Thursday Meet-10 மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி துறையின் மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. இதில் கட்டுரை சமர்ப்பித்தல், வினாடி-வினா, இயற்பியல் விஞ்ஞானி சி.வி.ராமன் பற்றிய தொகுப்பு, வேலைவாய்ப்புச் செய்திகள் ஆகியவை இடம்பெற்றன.
* 14.12.2017 அன்று இயற்பியல் துறை சார்பாக ஒருநாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இதில் மதுரையைச் சேர்ந்த அலைபேசி மென்பொருள் நிபுணர் திரு R.பாலமுருகன் கலந்துகொண்டு அலைபேசி பழுது நீக்குதல் குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.
* 29.12.2017 மற்றும் 30.12.2017 ஆகிய இரு தினங்கள் கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் "இயற்பியலில் தற்போதைய மாற்றங்கள்" என்ற தலைப்பிலான கருத்தரங்கம் இயற்பியல் துறையால் இந்திய அறிவியல் கழகங்களின் உதவியுடன் நடைபெற்றது. இதில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் K.பொற்செழியன், சென்னை, அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் D.அறிவொளி, சென்னை, சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் P.இராமமூர்த்தி, மற்றும் சென்னை, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் முனைவர் V.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினர். இக்கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் முதுலை மற்றும் இளங்கலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## வேதியியல் துறை

* 08.12.2017 அன்று கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர்கள் முனைபர் D.திருப்பதி மற்றும் திரு. G.வீரமணிகண்டன் ஆகியோருடன் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் 6பேர் கலந்துகொண்டனர்.
* 12.12.2017 அன்று துறைத்தலைவர் பேராசிரியர் B.சேர்வாரமுத்து மற்றும் முனைவர் G.பாலகிருஷ்ணன் ஆகியோர் மேற்பார்வையில் இளங்கலை இரண்டாமாண்டு மாணவர்கள் 35பேர் மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்கள் 18 பேர் இந்திய அரசின் அணுமின் சக்தி துறையின் கீழ் இயங்கும் தூத்துக்குடி கனநீர் ஆலைக்குச் (Heavy Water Plant) சென்று பார்வையிட்டு பல்வேறு சந்தேகங்களுக்கான விளக்கங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

* 18.12.2017 அன்று மதுரை, மதுரைக் கல்லூரியின் வேதியியல் துறையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் நடைபெற்ற Frontier in Chemistry (FIC 2017)" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கில் பேராசிரியர்கள் முனைவர் M.கணபதி மற்றும் முனைவர் G.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
* 22.12.2017 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பப் புலத்தில் நடைபெற்ற "Bio and Cheminformatics Tools for Science Applications" என்ற தலைப்பிலான ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் G.ராஜ்குமார் கலந்துகொண்டார்.

## தாவரவியல் துறை

* 07.12.2017 அன்று கோயமுத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒருநாள் இயற்கை வேளாண் பயிற்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் C.சௌந்தரராசு கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 11.12.2017 மற்றும் 12.12.2017 ஆகிய நாட்களில் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் வேதியியல், இயற்பியல் மற்றும் உயிரியல் புலத்தினால் நடத்தப்பெற்ற "Advanced Functional Materials for Energy Environment and Biomedical Applications" என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் V.ரமேஷ் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.
* 14.12.2017 மற்றும் 15.12.2017 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழக உயிரிதொழில்நுட்ப புலத்தில் நடைபெற்ற "Innovations in Biotechnology" என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் T.செல்லத்துரை மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
* 21.12.2017 அன்று கோயமுத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் துறையில் நடைபெற்ற இயற்கை மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைபர் S.சௌந்தரராசு மற்றும் மூன்றாமாண்டு மாணவர் தாமரைக்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

## விலங்கியல் துறை

* 06.12.2017 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் விலங்கியல் துறையில் நடைபெற்ற பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் துறைத்தலைவர் முனைவர் P.ராஜேந்திரன் துறை வல்லுனராகக் கலந்துகொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த ஆலோசனைகள் வழங்கினார்.
* 18.12.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் விலங்கியல் துறை சார்பாக "ZOO FEST 2017" கல்லூரிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இதன் துவக்கவிழாவில் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்பப் புலத்தின் பேராசிரியர் முனைவர் S.கண்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Opprotunities in Zoology" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இப்போட்டியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 61 மாணவ மாணவியர் கலந்துகொண்டனர். இதில் மதுரை, தியாகராசர் கல்லூரியின் உயிரி தொழில்நுட்பத் துறை மாணவர்கள் முதலிடம் பெற்று வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றினர்.
* 19.12.2017 அன்று மதுரை, S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.பவுன்ராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "சுற்றுச்சூழல் கல்வி" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

## வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத் துறை

* 08.12.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியை உதவிப் பேராசிரியர் முனைவர் K.B.ராஜா தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் G.பாலமுருகன் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை, ஆங்கில செய்திகள், ஹிந்தி செய்திகள், வணிக வினாடி வினா, கட்டுரை சமர்ப்பித்தல், சத்ரபதி சிவாஜி குறித்த குறும்படம், நன்றியுரை ஆகிய நிகழ்வுகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.
* 15.12.2017 அன்று நடைபெற்ற மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, வார செய்திகள் ஆங்கிலம், வாரசெய்திகள் ஹிந்தி, வணிக வினாடிவினா, Who Am I? புதிர் நிகழ்ச்சி, மகாகவி பாரதியார் குறித்த குறும்படம் மற்றும் நன்றியுரை ஆகிய நிகழ்ச்சிகளை மாணவர்கள் வழங்கினர். நிகழ்ச்சிகளை உதவிப்பேராசிரியர் B.மாரிமுத்து தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா கலந்துகொண்டார்.
* 29.12.2017 அன்று மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. இதில் வரவேற்புரை, வார செய்திகள் ஆங்கிலம், வாரசெய்திகள் ஹிந்தி, வணிக வினாடிவினா, Who Am I? புதிர் நிகழ்ச்சி, மகாகவி பாரதியார் குறித்த குறும்படம் மற்றும் நன்றியுரை ஆகிய நிகழ்ச்சிகளை மாணவர்கள் வழங்கினர். நிகழ்ச்சிகளை உதவிப்பேராசிரியர் C.சுந்தரம் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் திரு. R.மோகனகிருஷ்ணன் கலந்துகொண்டார்.
* 19.12.2017 மற்றும் 20.12.2017 ஆகிய இரு தினங்கள் சிவகாசி, மெப்கோ ஸ்லெங்க் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற "SPSS Applications in Data Analysis" என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியர் திரு.B.மாரிமுத்து கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 20.12.2017 அன்று விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் மதுரை நுடலளரைஅ நிறுவனத்தின் மேலாளர் திரு.செந்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Android App" குறித்து விரிவுரையாற்றினார். மேலும் இந்நிகழச்சியில் வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத் துறையின் கடந்த காலாண்டிற்கான சஞ்சிகை வெளியிடப்பட்டது.

## உடற்கல்வித் துறை

* 10.11.2017 முதல் 12.11.2017 வரை கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மண்டலங்களுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் M.K.மதன்குமார் (III Maths) 'B' மண்டல அணி சார்பாகக் கலந்துகொண்டு விளையாடினார்.
* 12.11.0217 முதல் 22.11.2017 வரை நமது கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி முகாமில் நமது கல்லூரி ஜிம்னாஸ்டிக்ஸ் அணி மாணவர்கள் 26 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். மாணவர்களுக்கு கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி இயக்குநர் திரு.இராமச்சந்திரன் மற்றும் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் இணைந்து பயிற்சி அளித்தனர்.
* 04.12.2017 முதல் 06.12.2017 வரை மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் M.G.R. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான தடகளப் போட்டிகளில் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் தலைமையில் 11 மாணவர்கள் கொண்ட அணியினர் கலந்துகொண்டனர். இதில் E.பவித்ரன் (III B.Com) உயரம் தாண்டுதலில் இரண்டாம் இடம் பிடித்தார்.
* 12.12.2017 அன்று மதுரை, திருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'B' மண்டல கல்லூரிகளுக்கிடையிலான ஹாக்கிப் போட்டியில் நமது கல்லூரியின் ஹாக்கி அணியினர் கலந்துகொண்டனர். இதில் J.அன்புச்செழியன் (III Maths), T.முத்துக்கிருஷ்ணன் (III Maths), S.காளிதாஸ் (III Che), K.கண்ணன் (II Maths), தேசப்பிரியன்(II His), S.விக்னேஷ் (II Maths) மற்றும் சுதேசமித்திரன் (I B.Com) ஆகிய 7 மாணவர்கள் 'B' மண்டல அணிக்கு தேர்வாகி 14.12.2017 முதல் 16.12.2017 வரை மதுரை, ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மண்டலங்களுக்கிடையிலான ஹாக்கிப் போட்டியில் 'B' மண்டல அணி சார்பாகக் கலந்துகொண்டு விளையாடினார்.
* 13.12.2017 அன்று விளையாட்டு தினத்திற்கான குழு விளையாட்டுப் போட்டிகள் தொடங்கின. நமது கல்லூரி மாணவர்கள் கணபதி, சிவா, குமரன் என மூன்று அணிகளாகப் பிரிந்து பல்வேறு குழு போட்டிகளில் விளையாடி வருகின்றனர். போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பிப்ரவரி 2018ல் நடைபெறும் கல்லூரியின் விளையாட்டு தின நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும். அனைத்து போட்டிகளுக்கும் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் நடுவராகக் கலந்துகொண்டு போட்டிகளை நடத்தி வருகிறார்.
* 24.11.2017 மற்றும் 25.11.2017 ஆகிய நாட்களில் கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 2ஆவது சுவாமி சித்பவானந்தர் நினைவு ஆண்கள் இரட்டையர் இறகுப்பந்துப் போட்டியின் துவக்க நிகழ்ச்சியில் திருச்சி, திருப்பராய்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவன ஆட்சிமன்ற உறுப்பினர், தொழிலதிபர் திரு.S.V.அழகப்பன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளைத் துவக்கி வைத்தார். போட்டியின் நிறைவு விழாவில் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் முனைவர் V.ஜெயவீரபாண்டியன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். வெற்றி பெற்றவர்களுக்கு முதல்பரிசாக ரூ.5000 மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.3000 வழங்கப்பட்டது.

## நூலகத் துறை

* 01.12.2017 மற்றும் 02.12.2017 ஆகிய இரண்டு நாட்கள் கரூர், சாரதா நிகேதன் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் நூலகத்துறைளில் இந்திய அரசின், கலாச்சாரத்துறை, கொல்கத்தா ராஜா ராம்மோகன் நூலக மையத்தின் நிதியுதவியுடன் நடைபெற்ற "Commecting Digital Divide Through Academic and Public Libraries" என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கில் நூலகர் முனைவர் M.பிரபாகரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார்.

## NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு

* 21.11.2017 முதல் 02.12.2017 வரை சத்தீஸ்கர், சி.வி.ராமன் பல்கலைக்கழத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் SUO S.ராகவன், SUO ராகவேந்திரன், SUO ஜெயராம் மற்றும் SUO M.காசிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
* 23.11.2017 முதல் 02.12.2017 வரை போடிநாயக்கனூர், ஏலக்காய் உற்பத்தியாளர் சங்க கல்லூரியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான வருடாந்திர ஒருங்கிணைந்த பயிற்சி முகாமில் நமது கல்லூரியின் 32 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.
* 29.11.2017 முதல் 22.12.2017 வரை உத்தர்கண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற்ற சாகசப் பயிற்சி மற்றும் மலையேறும் பயிற்சி முகாமில் T.கோதண்டராமன் (II B.Com) கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 30.11.2017 முதல் 06.12.2017 வரை கோயமுத்தூர், கற்பகம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புதுதில்லி, குடியரசுதின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான தேர்வு முகாமில் தேசிய மாணவர் படை மாணவர்கள் P.அழகுராஜா (II Phy) மற்றும் A.பாலஅரவிந்த் (II B.Com) ஆகியோர் கலந்துகொண்டு அடுத்தநிலை முகாமிற்குத் தேர்வாகினர். அதனைத் தொடர்ந்து 26.01.2018 அன்று புதுதில்லியில் நடைபெறும் குடியரசு தினவிழா அணிவகுப்பின் கலந்துகொள்வதற்கான இறுதி பயிற்சி முகாமில் கலந்துகொள்ள புதுதில்லி சென்றுள்ளனர்.
* 10.12.2017 அன்று திருவேடகம், ஏடகநாதர் கோயிலில், மற்றும் துர்க்கையம்மன் கோயிலில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட அணி எண்.75ஐச் சேர்ந்த இரண்டாமாண்டு மாணவர்கள் 67பேர் உதவிப்பேராசிரியர்கள் திரு K.காமாட்சி, மற்றும் திரு R.கார்த்திகேயன் ஆகியோர் மேற்பார்வையில் கோயில் உட்புறம் மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொண்டனர்.
* 10.12.2017 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற களப்பணியில் அப்பர் உழவாரப்பணிக் குழு மாணவர்கள் 72 பேர் வளாகத்தூய்மை, பூந்தோட்டப் பராமரிப்பு மற்றும் விளையாட்டு மைதானப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். முனைவர் K.செல்லப்பாண்டியன், திரு. R.மோகன்ராஜ், திரு. M.பிரேமானந்தம் மற்றும் திரு. R.குருமேகலைராஜன் ஆகியோர் பணிகளை மேற்பார்வை செய்தனர்.
* 17.12.2017 அன்று வாடிப்பட்டி, பொன்பெருமாள் மலை, ஸ்ரீ ஜெயவீர சஞ்சீவி ஆஞ்சநேயர் கோயிலில் நடைபெற்ற அனுமன் ஜெயந்தி விழாவில் இரண்டாமாண்டு அப்பர் உழவாரப்பணி மாணவர்கள் 70 பேர், பேராசிரியர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன், திரு. R.மோகன்ராஜ், திரு. M.பிரேமானந்தம் மற்றும் திரு. R.குருமேகலைராஜன் ஆகியோர் மேற்பார்வையில் உழவாரப்பணிகள் மேற்கொண்டனர்.
* 17.12.2017 அன்று மதுரை, ஒத்தக்கடையில் நடைபெற்ற அனுமன் ஜெயந்தி விழாவில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 20 பேர் கலந்துகொண்டு கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டனர்.
* 17.12.2017 அன்றைய நாட்டு நலப்பணித் திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அணி எண் 76ஐச் சேர்ந்த 30 மாணவர்கள் பேராசிரியர்கள் முனைவர் S.சந்திரசேகரன் மற்றும் திரு.B.மாரிமுத்து ஆகியோர் மேற்பார்வையில் மதுரை, ஒத்தக்கடையில் நடைபெற்ற அனுமன் ஜெயந்தி விழாவின் அன்னதான உணவு பரிமாறும் பணியில் ஈடுபட்டனர். 25 மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் களப்பணியில் ஈடுபட்டனர்.
* 24.12.2017 அன்று கல்லூரி வளாகத்தில் அப்பர் உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் இரண்டாமாண்டு மாணவர்கள் 90 பேர் கலந்துகொண்டு விளையாட்டு மைதானத்தை தூய்மைப்படுத்துதல், கல்லூரி அழகுத் தோட்டத்தை சீர்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டனர். பேராசிரியர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன், முனைவர் G.ராஜ்குமார், திரு. R.மோகன்ராஜ், திரு. M.பிரேமானந்தம் மற்றும் திரு. R.குருமேகலைராஜன் ஆகியோர் பணிகளை மேற்பார்வையிட்டனர்.
* 31.12.2017 அன்று அப்பர் உழவாரப் பணிக்குழுவின் முதலாமாண்டு மாணவர்கள் 100பேர் பேராசிரியர்கள் முனைவர் S.சந்திரசேகரன், திரு.M.இரகு, திரு.G.வீரமணிகண்டன், திரு.C.சுந்தரம் மற்றும் திரு.விக்னேஷ்வரன் ஆகியோர் மேற்பார்வையில் கல்லூரி வளாகம் மற்றும் ஆசிரியர் குடியிருப்புப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

## இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

* 19.12.2017 முதல் 23.12.2017 வரை கோயமுத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இளைஞர் செஞ்சிலுவைச் சங்க நான்கு நாள் பயிற்சி முகாமில் நமது கல்லூரி மாணவர்கள் M.கார்த்திக் ராஜா (III Eco), N.நவீன் பிரகாஷ் (II Eco), M.தினேஷ்குமார் (II B.Com) D.சௌந்தரபாண்டியன் (II Bot) ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

## கலை இலக்கிய மன்றம்

* 08.12.2017 அன்று மதுரை, கம்பன் கழகத்தில் நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் பாட்டுப்போட்டியில் 5 மாணவர்கள் கலந்துகொண்டனர்.
* 12.12.2017 அன்று மதுரை, தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் S.M.பிரேம்குமார் (III Zoo), M.ராகுல் (II B.Com) மற்றும் C.ராமநாதன் (I B.Com) ஆகியோர் கலந்துகொண்டனர்.

## குருதிக்கொடை

* 02.11.2017 அன்று A.அருண்குமார் (II CA), M.அழகுமணிவாசகம் (III Eng) தேனி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 08.11.2017 அன்று M.கார்த்திக்கண்ணன் (III CA), P.நாராயணசிவா (III Phy) மதுரை, தேவகி மருத்துவமனையிலும், 05.12.2017 அன்று சந்திரசேகரன் (III CA), P.G.ராஜேஷ்குமார் (III CA) மதுரை, கிரசென்ட் மருத்துவமனையிலும், 06.12.2017 அன்று C.முத்துச்செல்வம் (III B.Com) உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலும், 16.12.2017 அன்று A.சண்முகராஜ் (III Mat) சோழவந்தான், விஜயலட்சுமி மருத்துவமனையிலும், 21.12.2017 அன்று M.முத்துநாகேந்திரன் (III His), P.கோபிநாத் (III Zoo) மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனையிலும், R.முனீஸ்வரன் (II B.Com), M.சந்திரன் (III Che) மதுரை, ஆரம்ப சுகாதார மையத்திலும் இரத்ததானம் செய்தனர்.

## விடுமுறை மற்றும் திறக்கும் நாள்

* 12.01.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் பிரார்த்தனைக்குப் பின் அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களும் பொங்கல் விடுமுறைக்காகத் தத்தமது ஊர்களுக்குச் செல்கின்றனர்.
* 28.11.2017 முதல் 30.11.2017 வரையிலான மூன்று நாட்கள் முதலாமாண்டு மாணவர்களுக்கு ஆங்கிலமொழித்திறன் பயிற்சி முகாம் கல்லூரியில் நடைபெற உள்ளது. ஆகவே அவர்கள் 27.11.2017 அன்று இரவு 8.40 மணிக்கு வாழிவகுப்பிற்கு கல்லூரிக்கு வந்துவிடவேண்டும். அன்றைய இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
* பொங்கல் விடுமுறைக்குப் பிறகு 17.12.2017 புதன்கிழமையன்று கல்லூரி துவங்குகிறது. ஆகையால் முதலாமாண்டு மாணவர்கள் 16.12.2017 செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்குள்ளும் இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்கள் அனைவரும் 8.40 மணிக்குள்ளும் வந்துவிடவேண்டும். அன்று இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

## மாணவர்கள் செய்யவேண்டியவை

* மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையரை வணங்கி ஆசிபெற்று வரவேண்டும்.
* மாணவர்கள் விடுமுறையில் தங்கள் தினசரி நிகழ்வுகளை கட்டுரை ஏட்டில் ஒரு நாளைக்கு 250 வார்த்தைகள் ஆங்கிலத்தில் எழுதி பெற்றோர் கையொப்பம் பெற்று கல்லூரிக்கு வரும்பொழுது குருகுல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## 2017 டிசம்பர் மாதத்திற்கான கட்டண விவரம்

* உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு - ரூ.90/-
* அனைத்து இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கும் செய்தித்தாள் கட்டணம் - ரூ.17/-
* அனைத்து இளங்கலை இரண்டாமாண்டு மாணவர்களுக்கும் பாரதப் பண்பாடு புத்தகம் வழங்கியது - ரூ.40/-
* விவேகானந்த கேந்திரா - பண்பாட்டுத் தேர்வு முதலாமாண்டு மாணவர்களுக்கு தேசீய காவியம் இராமாயணம் புத்தகம் வழங்கியது - ரூ.40/-
* அனைத்து மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் வாழ்வியல் விழுமியங்கள் புத்தகம் வழங்கியது - ரூ.75/-
* அனைத்து கணிதத்துறை மாணவர்களுக்கும் கருத்தரங்கக் கட்டணம் - ரூ.100/-
* அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை வேதியியல் மாணவர்களுக்கான கருத்தரங்கக் கட்டணம் - ரூ.300/-
* பொருளியல்துறை NME மாணவர்களுக்கு புத்தகம் வழங்கியது - ரூ.290/-
* முதலாமாண்டு பொருளியல்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.900/-
* இரண்டாமாண்டு பொருளியல்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.575/-
* மூன்றாமாண்டு பொருளியல்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.1355/-
* முதலாண்டு வரலாற்றுத்துறை மாணவர்களுக்கு பொருளியல் விருப்பப்பாடப் புத்தகம் வழங்கியது - ரூ.140/-

* முதலாமாண்டு கணிதத்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.445/-
* இரண்டாமாண்டு கணிதத்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.1330/-
* மூன்றாமாண்டு கணிதத்துறை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.400/-
* இரண்டாமாண்டு இயற்பியல், வேதியியல் மாணவர்களுக்கு கணித விருப்பப்பாடப் புத்தகம் வழங்கியது ரூ.60/-

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**அன்பும் நமஸ்காரமும்**

இடம்: திருவேடகம் மேற்கு — **முனைவர் சீ.இராஜா**

நாள்: 05.12.2017 — முதல்வர்